# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்

## பாடம் 9: எந்தோரின் குறிகாரி

**1சாமுவேல் 28:3-25**

### நடந்த கதை . . .

சவுல் ராஜா பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்தார். இஸ்ரவேலின் படை சிறியது; வலுவற்றது. அதைத் தாக்க பெலிஸ்தரின் சேனை முழுவதும் கூடியிருந்தது. ‘‘சாமுவேல் இருந்திருந்தால் செய்யவேண்டியதைச் சொல்லியிருப்பார்’’ என்று சவுல் புலம்பினார். அந்தத் தீர்க்கதரிசி சில வருடங்களுக்கு முன்புதான் மரித்தார்.

தீர்க்கதரிசி அல்லது ஆசாரியர் யாரிடமாவது ஆலோசனை கேட்க சவுல் ராஜா தீவிரமாக முயன்றார்; ஆனால் ஆண்டவர் அவரிடம் பேசவில்லை. வாலிபப்பிராயத்தில் தேவனுக்கு நெருக்கமாக இருந்தவர்தான் சவுல். ஆனால், ராஜாவானபிறகு, கொடியவராக, தேவவார்த்தைக்கு எதிராகக் கலகம்செய்பவராக மாறினார். ஒருசமயம், ஒரு கிராமத்திலிருந்த ஆசாரியர்கள் அனைவரையும் கொலைசெய்தார். ஆண்டவருக்குச் செவி கொடுக்கத் தொடர்ந்து மறுத்துவந்தார்; இப்போது இக்கட்டான ஒரு காலக்கட்டத்தில் அவருக்குப் பதில்சொல்ல தேவன் விரும்பவில்லை.



‘‘அப்பொழுது சவுல் தன் ஊழியக்காரரை நோக்கி, அஞ்சனம்பார்க்கிற ஒரு ஸ்திரீயைத் தேடுங்கள்; நான் அவளிடத்தில் போய் விசாரிப்பேன்’’ என்றார். 1சாமுவேல் 28:7. அஞ்சனம் பார்க்கிறவர்களை, குறிசொல்கிறவர்களை நாடிச்செல்லக்கூடாதென்று தேவன் தம் மக்களிடம் தெளிவாகச் சொல்லியிருந்தார். லேவி 19:31; 20:27. ஆனால் தேவனுடைய பிரத்தியேகக் கட்டளையை சவுல் கொஞ்சமும் மதிக்கும் நிலையில் இல்லை.

மரித்தோரிடம் பேசுவதாகச் சொல்லிக்கொண்ட ஒரு பெண் எந்தோரில் இருப்பதாக அறிந்து, மாறுவேடம் அணிந்து, அவளிடம் சென்றார். அவளிடம், ‘‘சாமுவேலை எழும்பிவரப் பண்ணு’’ என்றார். அந்தச் சூனியக்காரி மந்திரத்தை உச்சரிக்க ஆரம்பித்தாள். சாமுவேல் தீர்க்கதரிசி என்று சொல்லிக்கொண்ட ஓர் ஆவி தோன்றி, நம்பிக்கையற்ற ஒரு செய்தியை ராஜாவுக்குச் சொன்னது. மறுநாள் நடக்க இருந்த யுத்தத்தில் சவுலும் அவருடைய மூன்று மகன்களும் மரிப்பார்களென அது கூறியது.

மறுநாளில் சவுலின் குமாரர்கள் பெலிஸ்தரால் கொல்லப்பட்டார்கள்; அதன்பிறகு, காயப்பட்டு, முற்றிலும் நம்பிக்கையிழந்த ராஜா தன் பட்டயத்தின்மேல் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டார். 1சாமு 31:2-4. அந்தச் சூனியக்காரிமூலம் சவுலிடம் பேசியது யார்? தேவனுடைய தீர்க்கதரிசி உயிர்த்தெழுந்து வந்தாரா? அல்லது, பிசாசானவன் வேஷமிட்டு வந்தானா?

# ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

### 1. சவுல் பார்த்த உருவம் உண்மையிலேயே சாமுவேல் தீர்க்கதரிசியா?

**1இராஜாக்கள் 22:22.** அப்பொழுது அது: நான் போய், அவனுடைய தீர்க்கதரிசிகள் எல்லாரின் வாயிலும் ____________ ____________ இருப்பேன் என்றது.

**வெளிப்படுத்தல் 16:14.** அவைகள் அற்புதங்களைச் செய்கிற ____________ ____________.

### 2. உயிரோடிருப்பவர்களோடு மரித்தவர்கள் பேசவோ, உயிரொடிருப்பவர்களைப் பயமுறுத்தவோ, மீண்டும் எழுந்தோ வரமுடியுமா?

**யோபு 14:21.** அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும் அவன் ____________; அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களைக் கவனியான்.

**பிரசங்கி 9:5,6,10.** மரித்தவர்கள் ____________ ____________; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர் முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ____________, அவர்கள் ____________, அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்துபோயிற்று; சூரியனுக்குக் கீழே (இந்த வாழ்க்கையில்) செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை … நீ போகிற ____________ செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே.

**குறிப்பு:** இல்லை! வேதாகமம் தெளிவாகச் சொல்கிறது. பூமியில் என்ன நடக்கிறது என்பது மரித்தவர்களுக்கு ஒன்றும் தெரியாது; எதுவும் செய்யவும் முடியாது.

**சங்கீதம் 115:17.** மரித்தவர்களும், மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்.

**சங்கீதம் 6:5.** மரணத்தில் உம்மை நினைவுகூர்வதில்லை.

**யோபு 7:10.** இனி தன் வீட்டுக்குத் திரும்பான்.

**ஏசாயா 38:18.** மரணம் உம்மைப் போற்றாது.

**சங்கீதம் 146:4.** அவன் யோசனைகள் அழிந்துபோம்.

### 3. மரணத்தின் வாசல்கள் யாருடைய கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாக வெளிப்படுத்தல் கூறுகிறது?

**வெளிப்படுத்தல் 1:18.** ____________, ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் ____________, ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்.

**குறிப்பு:** வேதாகமம் தெளிவாகச் சொல்கிறது. இயேசுவிடம் மாத்திரமே பாதாளத்தின் திறவு கோல் இருக்கிறது. மரணம்பற்றி நமக்கு எழும்புகிற கேள்விகளுக்குப் பதில்பெற அவருடைய வார்த்தையைத்தான் நாம் நாடவேண்டும்.

### 4. ஆதியில் தேவன் மனிதனை எவ்வாறு சிருஷ்டித்தார்?

**ஆதியாகமம் 2:7.** தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் ____________ உருவாக்கி, ____________சுவாசத்தை அவன் நாசியிலே ____________, மனுஷன் ஜீவாத்துமாவானான்.

**குறிப்பு:** சிருஷ்டிப்பின்போது, தேவன் இரண்டு காரியங்களைச் செய்தார்.

1. பூமியின் மண்ணிலிருந்து தேவன் மனிதனை உண்டாக்கினார்.
2. ஜீவ சுவாசத்தை அவனுடைய நாசியில் ஊதினார். மனிதன் ஜீவாத்துமாவானான்.

## 5. மரணத்தின்போது என்ன நடக்கிறது?

**பிரசங்கி 12:7.** *இவ்விதமாய் _______________ தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, _______________ தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போ(கிறது).*

**குறிப்பு:** சிருஷ்டிப்பின்போது நடந்ததற்கு நேர்மாறானது மரணத்தின்போது நடக்கிறது. சரீரம் மண்ணுக்குத் திரும்புகிறது; ஆவி, அதாவது சுவாசம் அதைத் தந்த தேவனிடம் திரும்பிச்செல்கிறது. தேவனிடம் திரும்பிச் செல்லும் 'ஆவி'யானது, தேவன் ஆதியில் மனுஷனுக்குள் ஊதின ஜீவ சுவாசம்தான் என்று வேதாகமம் தெளிவாகச் சொல்கிறது. யாக் 2:26; யோபு 27:3; யோபு 33:4. "நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள, அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும். நீர் உம்முடைய ஆவியை(சுவாசத்தை) அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்" என்று சங்கீதம்104:29, 30 கூறுகிறது.

## 6. மரித்தவர்கள் தாங்கள் மரித்ததும் எங்கே செல்கிறார்கள்?

**யோபு 21:32.** *அவன் _________________ கொண்டுவரப்படுகிறான்; அவன் கோரி காக்கப்பட்டிருக்கும்.*

**யோவான் 5:28,29.** *______________________ அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது … புறப்படுவார்கள்.*

**குறிப்பு:** மரித்த நீதிமான்களும், பாவிகளும் கல்லறைகளில்தான் இருப்பார்கள். இயேசுவின் சத்தத்தைக் கேட்டு உயிர்த்தெழும்போது, கல்லறையிலிருந்து எழுந்து, நற்பலனோ தண்டனையோ பெறுவார்கள்.

## 7. தாவீது ராஜா இரட்சிப்பைப் பெற்றவர் என்று வேதாகமம் தெளிவாகச் சொல்கிறது. இப்போது அவர் பரலோகத்தில் இருக்கிறாரா?

**அப்போஸ்தலர் 2:29.** *சகோதரரே, கோத்திரத்தலைவனாகிய தாவீதைக்குறித்து நான் உங்களுடனே தைரியமாய்ப் பேசுகிறதற்கு இடங்கொடுங்கள்; அவன் ____________________ __________________________; அவனுடைய கல்லறை இந்நாள்வரைக்கும் நம்மிடத்திலிருக்கிறது.*

**அப்போஸ்தலர் 2:34.** *தாவீது பரலோகத்திற்கு ______________ ____________________.*

**குறிப்பு:** இல்லை! தாவீது பரலோகத்தில் உயிரோடு இல்லை; அவர் மரித்து, அடக்கம்பண்ணப்பட்டார் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு தெளிவாகச் சொல்லியுள்ளார். மேலும், எபிரெயர் 11:32–40இல், எல்லாக் காலங்களிலுமுள்ள நீதிமான்கள் தங்களுக்கேற்ற பலனை இன்னும் அடையவில்லை என்றும், ஒரே சமயத்தில் தங்கள் பலனை அடைவார்கள் என்றும் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. வச 39,40.

## 8. ஆத்துமா அழிவில்லாதது, சரீரம் மாத்திரம்தான் மரிக்கிறது என்பது உண்மையில்லையா?

**எசேக்கியேல்18:4.** *______________________ ஆத்துமாவே _____________.*

**தீமோத்தேயு 6:15,16.** *ராஜாதி ராஜாவும், கர்த்தாதி ________________, _________________, சாவாமையுள்ளவர்.*

**குறிப்பு:** நாம் ஆத்துமாக்கள். ஆத்துமாக்கள் மரிக்கக்கூடியவை. மனிதன் சாவுக்கேதுவானவன். தேவன்மாத்திரமே சாவாமை உடையவர். 'ஆத்துமா மரிக்காது, அது அழியாத்தன்மையுடையது' என்கிற பிரபல நம்பிக்கை வேதாகமத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. இது மனிதனால் உண்டான போதகம்.

## 9. நீதிமான்கள் எப்போது அழிவில்லாதவர்களாக ஆக்கப்படுவார்கள்?

**1கொரிந்தியர் 15:51–53.** *கடைசி ____________________ தொனிக்கும்போது ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் ______________________. எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் __________________________ … சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ள வேண்டும்.*

**1 தெசலோனிக்கேயர் 4:16.** *கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது ______________________ மரித்தவர்கள் _____________ எழுந்திருப்பார்கள்.*

**குறிப்பு:** ஆம், உயிர்த்தெழுதலில்தான் நீதிமான்களுக்கு அழியாத்தன்மை கொடுக்கப்படும். துன்மார்க்கர் அதைப் பெற்றுக்கொள்வதில்லை.

## 10. மரணம்பற்றி வேதாகமம் மீண்டும்மீண்டும் என்ன சொல்கிறது?

**யோவான் 11:11,14.** *நம்முடைய சிநேகிதனாகிய லாசரு ______________ … லாசரு மரித்துப்போனான்.*

**மத்தேயு 27:52.** *கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்த வான்களுடைய ______________ எழுந்திருந்தது.*

**2சாமுவேல் 7:12.** *நீ உன் பிதாக்களோடே ______________பண்ணும்போது.*

**1தெசலோனிக்கேயர் 4:14.** *இயேசுவுக்குள் ______________ தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்.*

**குறிப்பு:** மரணத்தை நித்திரை என்று வேதாகமம் அழைக்கிறது. முற்றிலும் சுயநினைவை இழந்துள்ள ஒரு நிலைதான் மரணம்; மரணநிலையில் 15 நிமிடமும் ஒன்றுதான், ஆயிரம் வருடங்களும் ஒன்றுதான். உயிர்த்தெழுதலின்போது இயேசு அனைவரையும் எழுப்பும்மட்டும், மரித்தவர்கள் கல்லறைகளில் 'நித்திரை' பண்ணுகிறார்கள். 'செத்தவர்களின் ஆவிகள் பரலோகத் தூதர்களாக வருகின்றன; நல்ல ஆவிகளான அவற்றை நாம் தொடர்புகொள்ளலாம்' என்று சொல்லப்படும் கருத்துக்கு வேதாகமத்தில் எந்த ஆதாரமும் இல்லை.

## 11. குறிசொல்லுகிறவர்களும், சூனியக்காரரும், மாயவித்தைக்காரரும் மரித்தோரிடம் பேசமுடியாது; அப்படியானால் அவர்கள் யாரிடம் பேசுகிறார்கள்?

**வெளிப்படுத்தல் 16:14.** *அவைகள் ______________ செய்கிற பிசாசுகளின் ஆவிகள்.*

**குறிப்பு:** பூமியின் மக்களுக்கு உதவிசெய்யும் 'பணிவிடை ஆவிகள்' என்று பரலோகத் தூதர்கள் அழைக்கப்படுகின்றனர். எபி 1:14. சாத்தானோடு பரலோகத்திலிருந்து தள்ளப்பட்ட தூதர்களும் (வெளி 12:7–9) ஆவிகள்தாம்; ஆனால், அவை தீய ஆவிகள். அற்புதங்களைச் செய்து, மனிதரை வஞ்சிக்கின்றன. வெளி 16:13,14. 'சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்' அவை செயல்படுகின்றன. 2தெசலோனிக்கேயர் 2:9; 'அது மனுஷருக்குமுன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை' இறங்கிவரப் பண்ணவும் முடியும். வெளி 13:13. ஆவிமார்க்கத்தில் உள்ளவர்கள் தாங்கள் மரித்தோரின் ஆவிகளோடு பேசுவதாகச் சொல்வார்களானால், உண்மையில் சாத்தானின் விழுந்துபோன தூதர்களோடுதான் தொடர்புகொள்கிறார்கள். ஏசாயா 8:19,20.

## 12. மரித்தோரின் ஆவிகள் உயிரோடு உலாவுவதாக மனிதர் நம்பவேண்டுமென்று சாத்தான் ஏன் விரும்புகிறான்?

**மத்தேயு 24:24,25.** *கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் ______________பட்டவர்களையும் ______________ ______________ ______________ அற்புதங்களையும் செய்வார்கள். இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்.*

**குறிப்பு:** "நீங்கள் சாகவே சாவதில்லை" என்பதுதான் மனிதர்களிடம் சாத்தான் சொன்ன முதல் பொய். ஆதி 3:4. மரித்தவர்களின் ஆவிகள் உயிரோடு திரிவதாக மக்கள் நம்பவேண்டுமென்று சாத்தான் விரும்புகிறான். அப்போதுதான் மரித்த நீதிமான்கள், பரிசுத்தர்கள், தீர்க்கதரிசிகள் போல அவனுடைய தூதர்கள் வேஷந்தரிக்க முடியும்; அவனும் ஒளியின் தூதனைப்போலத் தோன்றமுடியும். 2கொரி 11:13–15. அப்படியாக, லட்சக்கணக்கானோரை அவன் வஞ்சிக்கிறான். இந்தத் தீய ஆவிகளை வைத்துத்தான் 'ஆவிமார்க்கம்' எழுந்துள்ளது. **இரண்டு தவறான நம்பிக்கைகளின்** அடிப்படையில் அந்த மார்க்கம் உள்ளது.

**1) மரித்தவர்கள் உயிரோடிருக்கிறார்கள்,**

**2) நீங்கள் அவர்களைத் தொடர்புகொள்ள முடியும், அல்லது அவர்கள் உங்களைத் தொடர்புகொள்ள முடியும்.**

சாத்தானுடைய மிகப் பயங்கரப் போதனைகளில் இதுவும் ஒன்று. ஆனாலும், உலகம்முழுவதுமே இதை இன்று நம்புகிறது. எந்தோரின் குறிகாரி சாமுவேலை எழும்பிவரச் செய்யவில்லை. மாறாக, சாமுவேலைப்போல் வேஷந்தரித்த ஒரு தீயதூதனைத்தான் அவள் பார்த்தாள்.

## 13. கடைசி நாட்களில் இந்தப் பொய் ஆவிகளை வைத்து சாத்தான் எவ்வளவு வல்லமையாகக் கிரியைசெய்வான்?

**வெளிப்படுத்தல் 18:23.** *உன் சூனியத்தால்* __________________ *ஜாதிகளும்* ______________________________.

**வெளிப்படுத்தல் 18:2.** *மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும்* _______________ _________________ *ஆவிகளுடைய காவல்வீடுமாயிற்று.*

**வெளிப்படுத்தல் 12:9.** ______________________ *மோசம்போக்குகிற பிசாசு என்றும், சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம்.*

**குறிப்பு:** தீயதூதர்கள் மூலம் செய்யும் அற்புதங்களால் (மாயாஜாலங்களால்), கிட்டத்தட்ட உலகம் முழுவதையுமே சாத்தான் வஞ்சித்துவிடுவான்.

## 14. தீயஆவிகளின் இந்த அற்புதங்களை தேவன் எவ்வாறு பார்க்கிறார்?

**லேவியராகமம் 20:27.** ___________________________________ *புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும்* ______________________________________.

**1தீமோத்தேயு 4:1.** *சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுவின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து,* _________________ *விட்டு* __________________________________.

**எபேசியர் 5:11.** ___________ __________________ *கிரியைகளுக்கு உடன்படாமல்.*

**கலாத்தியர் 5:19-21.** *மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவை யாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை,* ___________________, *பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே.*

**வெளிப்படுத்தல் 21:8.** *சூனியக்காரரும் ... இரண்டாம் மரணமாகிய* ________________ *கந்தகமும் எரிகிற* ________________ *பங்கடைவார்கள்.*

**குறிப்பு:** மோசேயின் நாட்களில், சூனியக்காரர்கள் அனைவரையும் சங்கரிக்கவேண்டுமென்று தேவன் கட்டளையிட்டிருந்தார். மாயவித்தை மாம்சத்தின் கிரியை என்றும், அதைச் செய்கிறவர்கள் அழிந்துபோவார்கள் என்றும் இன்று தேவன் கூறுகிறார். சூனியக்காரர்களிடம் செல்கிறவர்கள் தங்கள் விசுவாசத்தை இழக்கிறார்கள். 'மாயவித்தைக்காரர்கள் யாவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினிக் கடலிலே மடிந்துபோவார்கள்' என்று தேவன் கூறுகிறார்.

## 15. தேவன் தம்முடைய மக்களுக்கு எத்தகைய மகிமையான வல்லமையைக் கொடுக்கிறார்?

**பிலிப்பியர் 3:10.** *நான் அவரையும் அவருடைய* ______________________________ *வல்லமையையும் ... அறிகிறதற்கு.*

**குறிப்பு:** இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின் அதே வல்லமையை நீதியாக வாழ விரும்புகிறவர்களுக்கும் அவர் கொடுக்கிறார். என்ன மகத்துவம்! எந்த விலையும் இன்றி இலவசமாகக் கிடைக்கும் ஈடுஇணையற்ற அந்த வல்லமையைப் பெற்றும் நாம் எவ்வாறு தோற்கமுடியும்? இயேசு நம்மை நேசிக்கிறார். அதனால்தான் தீயதூதர்களின் வல்லமைக்கும் அற்புதங்களுக்கும் நாம் விலகியிருக்கும்படி நம்மை எச்சரிக்கிறார். தம்முடைய ராஜ்யத்திற்காக நம்மை ஆயத்தம் பண்ணுவதற்குத் தேவையான அற்புதங்களைச் செய்வதாக வாக்குரைத்திருக்கிறார். பிலி 1:6.

## நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

பூமியின் நிகழ்வுகள் எல்லாம் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதை உணர்ந்து உங்கள் வாழ்க்கையை முற்றிலுமாக தேவனிடம் அர்ப்பணிப்பீர்களா?

**பதில்:** ______________________________

# துணைப்பகுதி

***மேலும் படிப்பதற்கான கூடுதல் தகவல்கள் இந்தப் பகுதியில் உள்ளன.***

## சிலுவையில் தொங்கிய கள்ளன்

சிலுவையில் தொங்கிய கள்ளனிடம் இயேசு, 'இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்' என்று சொன்னார். அவன் அன்றைக்கே பரலோகம் செல்வான் என்றா வாக்குரைத்தார்? லூக்கா 23:43 இல் இயேசு சொன்ன அந்த வார்த்தைகளுக்கு அர்த்தங் காண, 'அன்றைய தினத்தில் இயேசு பரலோகம் சென்றாரா?' என்கிற முக்கியக் கேள்விக்கு முதலில் பதிலளிக்க வேண்டும்.

இயேசு அன்று பரலோகம் போனதாக வேதாகமம் சொல்லவில்லை. அவர் உயிர்த்தெழுந்த நாளில், கல்லறைத் தோட்டத்தில் மரியாளைச் சந்தித்தபோது, 'என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை' என்று சொன்னார். யோவான் 20:17. ஞாயிற்றுக்கிழமைவரை இயேசு தம் பிதாவிடம் செல்லவில்லை என்றால், அதற்கு முந்தின வெள்ளிக்கிழமையில் அவர் பரலோகம் சென்றாரென்று எவ்வாறு சொல்லமுடியும்?

அப்படியானால் இயேசு 'இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்' என்று ஏன் சொன்னார்? மூல கிரேக்கப் பிரதிகளில், நிறுத்தற்குறிகள் எதுவும் இல்லை. காற்புள்ளி, முற்றுப்புள்ளி போன்ற நிறுத்தற்குறிகளை, வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள்தாம் வசனத்தில் தாங்கள் விரும்பின இடங்களில் போட்டார்கள். ஒரே ஒரு காற்புள்ளி, ஒரு வரியின் மொத்த அர்த்தத்தையும் மாற்றமுடியுமென்பது தெரியுமா? லூக்கா 23:43 இல் ஆண்டவர் சொன்னதை, 'நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று இன்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்' என்றுதான் வாசிக்கவேண்டும். அப்படித்தான் இயேசுவும் சொல்லியிருக்கிறார். 'இன்று எல்லாமே இழந்துபோனதுபோல் தெரியலாம், நான் ஆண்டவராக அல்லது ராஜாவாக இல்லாததுபோல் தெரியலாம், என் சீடர்கள் அனைவருமே ஓடியிருக்கலாம், என் கரங்கள் சிலுவையில் ஆணி அறையப்பட்டிருக்கலாம், ஆனாலும், உன்னை நான் இரட்சிக்கமுடியும்' என்பதை அவனுக்குத் தெரிவித்தார்.

அந்தக் கள்ளனும், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட யாவரும் உயிர்த்தெழுதலின் வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொண்டு, இயேசுவோடு பரலோகத்தில் காணப்படத்தான் போகிறார்கள்.

## வேதாகமத்தில் 'ஆவி' 'சுவாசம்' எனும் வார்த்தைகளுக்கு என்ன அர்த்தம்?

'சுவாசம்' , 'ஆவி' இரண்டும் ஒன்றுதான். யோபு 27:3. அந்த ஆவி அல்லது சுவாசம் தன் நாசியில் இருக்கிறதென யோபு சொல்கிறார். சிருஷ்டிப்பின்போது, ஆதாமின் நாசியிலே தேவன் 'சுவாசத்தை' ஊதினார். ஆதி 2:7. எனவே, ஒருவர் மரிக்கும்போது அந்தச் சுவாசம்தான் தேவனிடம் திரும்பிச் செல்கிறது; உடலைவிட்டுப் பிரிந்து வேறெந்த ஆத்துமாவும் செல்லவில்லை. மரணத்தின்போது, உடலைவிட்டுப் பிரிந்து ஓர் ஆத்துமா தேவனிடம் செல்வதாக வேதாகமத்தில் எங்கும் சொல்லப்படவே இல்லை.

## ஒருவர் மரிக்கும்போது 'ஆத்துமா' எங்குச் செல்கிறது?

சிருஷ்டிப்பின்போது சரீரம், சுவாசம் ஆகிய இரண்டும் சேர்ந்துதான் ஓர் ஆத்துமாவை உருவாக்கின. இந்த இரண்டும் இல்லாமல் ஆத்துமா இல்லை. மரணத்தின்போது இந்த இரண்டும் பிரிந்துவிடுகின்றன. சரீரம் மண்ணுக்குத் திரும்புகிறது; சுவாசம் தேவனிடம் திரும்புகிறது. ஆத்துமா எங்கும் செல்வதில்லை; அப்படியொன்று இருந்தால்தானே செல்வதற்கு!

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com